**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**

**முன்னிலை – திரு. எஸ். வடிவேல், பி.எஸ்சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவினாசி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(FAC)**

2023 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 17 ஆம். நாள் திங்கள் கிழமை

இ.ம.எண்.623/2018

இன்

அசல் வழக்கு எண்.150/2009

1. திருமதி.வள்ளியம்மாள்
2. திருமதி.லக்ஷ்மி --மனுதாரர்கள்/வாதிகள்

......எதிர்.....

1.திரு.பழனிசாமி(இறப்பு)
2. திரு.கந்தசாமி
3. திரு.சண்முகசுந்தரம்
4. திரு. சுப்பிரமணியம்
5. திரு.பாலக்கிருஷ்ணன்
6. திரு. வேலுச்சாமி
7. திருமதி.சரஸ்வதி
8. திருமதி.வசந்தி
9. திருமதி.சுமதி.
10. திருமதி.வேலுமணி
11. திரு.பொன்னுசாமி
12. திருமதி.திலகவதி
13. திரு.நடராஜன்

--எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு இறுதியாக கடந்த 23.02.2023ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.மகேசன் அவர்கள் ஆஜராகியும், 10 முதல் 12 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.வெங்டாச்சலபதி அவர்கள் ஆஜராகியும், 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சந்தோஸ்குமார் அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினர்களாக உத்திரவிட்டும் மற்ற எதிர்மனுதாரர்களையும் தோன்றா தரப்பினர்களாக உத்திரவிட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

கடந்த 14.06.1984 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தை செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதி வேண்டி கட்டளை 6 விதி 17 படி இம்மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

**2.மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

2.1) மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும் பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை மற்றும் உறுத்து கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கினை தொடர்ந்துள்ளதாகவும் மூன்றாம் பிரதிவாதி சண்முகசுந்தரம் மோசடியாக வாதிகளின் அம்மா நாகம்மாள் என்பவரிடமிருந்து கடந்த 10.06.1991 தேதியில் தாவா சொத்தின் முதல் ஐட்டம் சொத்தைப் பொறுத்து கொடை ஆவணம் எழுதி பெற்றுள்ளதாகவும் வாதிகளின் சகோதரர்கள் கடந்த 10.06.1984 தேதியில் வாதிகளுடைய சம்மதம் இல்லாமல் வாதிகளுக்கு தெரியாமல் வாதிகளின் தந்தையின் சொத்தை பாகப்பிரிவினை செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2.2) வாதிகளின் சகோதரர்கள் சட்டத்துக்கு புறம்பாக வேண்டுமென்றே மோசடியாக அந்த ஆவணங்களை தயார் செய்து வழக்கு சாட்சிய விசாரணையின் போது மேற்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாகவும் அந்த ஆவணங்கள் வாதிகளின் சட்டப்படியான உரிமைகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் வாதிகள் அந்த ஆவணங்களை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர வேண்டி வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும் மனுவினை அனுமதிக்க வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது.

**3. <u>எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

**3.1)** மனு சட்டப்படியும் சங்கதிகள் படியும் நிலைக்கத் தக்கது அல்ல என்றும் எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும் என்றும் மனு சங்கதிகளை எதிர்மனுதாரர்கள் மறுத்ததுடன் மனுதாரர்கள் கடந்த 2009-ல் பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்ததாகவும் அதில் 1-ம் பிரதிவாதி கடந்த 16. 11.2010 தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும் அந்த எதிர்வழக்குரையில் 1-ம் பிரதிவாதி கடந்த 14.06.1984 தேதியில் தானும் அவரது சகோதரர்கள் கருப்புசாமி, கந்தசாமி, சண்முகசுந்தரம், சுப்பிரமணி, பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் இணைந்து குடும்ப சொத்தினை பாகப்பிரிவினை செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளதாகவும் அதில் "பி" அட்டவணை சொத்து 1-ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

3.2) மேற்கண்ட வகையில் 2010 ஆம் வருடத்திலேயே மனுதாரர்களுக்கு 14.06.1984 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் பற்றி தெரியும் என்றும் ஆனால் மனுதாரர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு தற்போது வா.சா.1-

ன் முதல் விசாரணை கடந்த 12.07.2017 தேதியில் முடிக்கப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையும் செய்து முடிக்கப்பட்டுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து வா.சா.2 விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணையும் செய்து முடிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமும் தொடங்கப்பட்டுள்ளதாகவும் கடந்த 9 வருடங்களாக மனுதாரர்கள் விளம்புகை பரிகாரம் கோர எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளதாகவும் பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும்போது 14.06.1984 தேதியிட்ட பாகப்பிரிவினை குறித்து கேள்வி எழுப்பப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

3.3) தற்போது மேற்கண்ட குறைபாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு மனுதாரர்கள் இம்மனுவினை எந்தவித முகாந்திரமும் இன்றி தாக்கல் செய்துள்ளதாகவும் வழக்கு நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வர கூடாது என்ற அடிப்படையில் இழுத்தடிக்க வேண்டி தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர்களின் திருத்த மனு எந்த விதத்திலும் அசல் வழக்கினை முறையாக முடிவு செய்ய உதவியாக இருக்காது என்றும் இந்த திருத்தமானது அசல் வழக்கின் தன்மையை மாற்ற கூடும் என்றும் வேண்டுமென்றே 9 வருடங்கள் அமைதியாக இருந்துவிட்டு தற்போது கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும் இம்மனுவினை அனுமதித்தால் பிரதிவாதிகளுக்கு பாதகம் ஏற்படும் என்றும் தற்போது வழக்கு விசாரணை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது என்றும் 2-ம் மனுதாரரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் 14.06.1984 தேதியிட்ட ஆவணத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்ய உரிமையுள்ளவர்கள் அல்ல என்று கூறப்பட்டுள்ளது.

3.4) 2-வது வாதி சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் 9-வது பத்தியில் தன்னுடைய சகோதரர்கள் கடந்த 14.6.1984 தேதியில் பாகப்பிரிவினை

செய்துள்ளதாகவும் அது பற்றி மனுதாரர்கள் தங்களது வாதுரையில் குறிப்பிட்டு கூறாமல் சாட்சியம் அளித்துள்ளதாகவும் மனுதாரர்கள் முக்கிய சங்கதிகளை மறைத்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர்கள் சுத்த கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும் மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்பட்டுள்ளது .

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டுள்ளது.வழக்குகோப்புகள் கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

5. **<u>இம்மனு அனுமதிக்க உகந்ததா இல்லையா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயமாகும்.</u>**

5.1) மனு தரப்பினர்களை அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க மனுதாரர்களை வாதிகள் என்றும் எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகள் என்றும் குறித்து உரைக்கப்பட்டுள்ளது. வாதிகள் பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள்.

5.2) இம்மனு அனுமதிக்க உகந்ததா இல்லையா என்பதை பரிசீலிக்கையில் கட்டளை 6 விதி 17-ன் வகைமுறையை இவ்விடத்தில் குறித்து உரைக்கப்பட வேண்டியது அவசியம் ஆகும்.

CIVIL PROCEDURE CODE (AMENDMENT ACT), 2002 Order VI Rule 17.

"R.17. Amendment of Pleadings.

The Court may at any stage of the proceedings allow either party to alter or amend his pleadings in such manner and on such terms as may be just, and all such amendments shall be made as may be necessary for the purpose of determining the real question in controversy between the parties:

Provided that no application for amendment shall be allowed after the trial has commenced, unless the Court comes to the conclusion that in spite of due

diligence, the party could not have raised the matter before the commencement of trial."

5.3) மண்மிகு உச்ச நீதிமன்றம் பின்வரும் வழக்கில் கருத்து செறிவுமிக்க முன் தீர்ப்பினை வழங்கியுள்ளது. Ajendraprasadji N. Pandey vs. Swami Keshavprakeshdasji N., (2006) 12 SCC 1, the Hon'ble Supreme court held as under;

"The date of settlement of issues is the date of commencement of trial. [Kailash vs. Nankhu & Ors. (supra)] Either treating the date of settlement of issues as date of commencement of trial or treating the filing of affidavit which is treated as examination in chief as date of commencement of trial, the matter will fall under proviso to order 6 Rule 17 CPC. The defendant has, therefore, to prove that in spite of due diligence, he could not have raised the matter before the commencement of trial. We have already referred to the dates and events very elaborately mentioned in the counter affidavit which proves lack of due diligence on the part of the defendant Nos. 1 and 2 (appellants)."

5.4) மேற்கண்ட சட்ட வகைமுறையை கவனமாக பரிசீலிக்கையில் சாட்சிய விசாரணை தொடங்கப்பட்ட பிறகு தரப்பினர்கள் வழக்குரையை திருத்த அனுமதிக்க முடியாது. அதேசமயம் போதிய கவனமுடன் இருந்தும் சாட்சிய விசாரணைக்கு முன்பாக வழக்குரையை திருத்த நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்பதை நீதிமன்றம் திருப்தியுரும் வகையில் எடுத்துக் கூறினால் சாட்சிய விசாரணைக்கு பிறகும் வாதுரையை திருத்தம் செய்ய அனுமதிக்கலாம் என்பதை அறிய முடிகிறது. மேலும் சாட்சிய விசாரணையின் தொடக்கம் என்பது வழக்கில் எழுவினா வனையப்பட்ட பிறகு முதல் விசாரணைக்கு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்வதாகும்.

5.5) இந்நீதிமன்ற பரிசீலனையில் உள்ள இம்மனுவில் சாட்சிய விசாரணையின் போது தான் 14.06.1984 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தை பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சிய விசாரணையின் போது தான் 14.06.1984 தேதியிட்ட பாகப்பிரிவினை குறித்து வாதிகளுக்கு தெரிய வந்ததாக கூறப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன் வைத்துள்ள வாதமானது எதிர்வழக்குரை கடந்த 16.10.2010-லேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் பாகப்பிரிவினை ஆவணத்தை குறித்து கூறப்பட்டுள்ளதாகவும் அதற்கு பின்னிட்டு வாதிகள் தரப்பு சாட்சியங்களை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் போது மேற்கண்ட 14.06.1984 பாகப்பிரிவினை குறித்து கேள்வி எழுப்பப்பட்டுள்ளது என்றும் மேற்கண்ட சூழ்நிலையில் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்று வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

5.6) இருதரப்பு வாதங்களை கவனமாக கருத்தில் எடுத்துக் கொண்டு வழக்கு கோப்பினை பரிசீலனை செய்கையில் இந்த அசல் வழக்கு ஆனது 29.06.2009 தேதியில் வாதிகளால் பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட அசல் வழக்கில் 1-ம் பிரதிவாதி தரப்பில் கடந்த 16.11.2010 தேதியில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை கவனமாக பரிசீலிக்கையில் அதில் 1-ம் பிரதிவாதி தன்னுடைய சகோதரர்களுடன் கடந்த 14.06.1984 தேதியில் பாகப்பிரிவினை செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

5.7) மேற்கண்ட 16.11.2010 தேதியிட்ட எதிர் வழக்குரைக்கு பின்னிட்டு கடந்த 12.07.2011-ல் வழக்கெழு வினாக்கள் வனையப்பட்டுள்ளது. அதற்குப் பின்னிட்டு பல்வேறு வழக்கு விசாரணை நாட்களுக்கு பிறகு கடந்த 16.06.2014 தேதியில் வாதிகள் தரப்பில் வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 7 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதற்குப் பின்னிட்டு 1-ம் பிரதிவாதி இறந்த பிறகு பல்வேறு விசாரணை நாட்களுக்கு பிறகு கடந்த 03.08.2017-ல் வா.சா.1 தரப்பில் கூடுதல் பிரமாண சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ. 8

மற்றும் 9 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதற்குப் பின்னிட்டு கடந்த 31.08.2017 ல் வா.சா.1-ஐ பிரதிவாதிகள் தரப்பில் பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு மீண்டும் கடந்த 04.11.2017 தேதியில் வா.சா.1 -ஐ குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டு வாதிகள் தரப்பு மற்ற சாட்சியத்திற்காக நாள் குறிக்கப்பட்டுள்ளது.

5.8) பின்னிட்டு கடந்த 06.12.2017 தேதியில் வா.சா. 2 விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.10 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதற்குப் பின்னிட்டு கடந்த 12.02.2018 தேதியில் வா.சா.2 குறுக்கு விசாரணை செய்யப்பட்டு கடந்த 21.02.2018 தேதியில் வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்கு 27.02.2018 தேதி அன்று விசாரணைக்கு நாள் குறிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 23.03.2018 தேதியில் பிரமாண வாக்குமூலம் மூலமாக பி.சா.1 விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு பின்னிட்டு கடந்த 27.03.2018 தேதியில் பி.சா.ஆ.5 முதல் 7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.1 சாட்சியை கடந்த 04.07.2018 தேதியில் 10 முதல் 12 வரையிலான பிரதிவாதிகள் மற்றும் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ளது. அதற்கு பின்னிட்டு கடந்த 12.07.2018 தேதியில் பி.சா.2 முதல் விசாரணை செய்யப்பட்டு பி.சா.ஆ.8 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5.9) பி.சா.2 சாட்சியை கடந்த 24.07.2018-ல் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ளது. அதற்கு பின்னிட்டு மூன்றாம் பிரதிவாதி தரப்பில் சாட்சியம் கடந்த 11.08.2018 தேதியில் முடிக்கப்பட்டு 10 முதல் 12 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.3 கடந்த 20.08.2018 தேதியில் முதல் விசாரணை செய்யப்பட்டு பி.சா.3 மூலமாக கடந்த 24.08. 2018 தேதியில் பி.சா.ஆ.

9 முதல் 15 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.3 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய சூழ்நிலையில் வாதிகள் தரப்பில் கடந்த 10.09.2018 தேதியில் இந்த திருத்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கின் விசாரணையானது வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் 3-ம் பிரதிவாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு 10 முதல் 12 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் பி.சா.3 விசாரணை செய்யப்பட்டு வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது.

5.10) இம்மனுவின் 2-வது மனுதாரர் தன்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தின் 9-வது பத்தியில் 14.06.1984 தேதியிட்ட பாகப்பிரிவினை குறித்து கூறியுள்ளார். மேற்கண்ட பாகப்பிரிவினை ஆவணம் குறித்து ஏற்கனவே 2-ம் வாதியை குறுக்கு விசாரணை செய்யும் போது பிரதிவாதிகள் தரப்பில் கேள்விகள் கேட்கப்பட்டு பதில்கள் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து சூழ்நிலைகளிலும் வாதிகளுக்கு கடந்த 16.11.2010 தேதியிட்ட எதிர்வழக்குரை தாக்கல் செய்த நாள் அன்றே 14.06.1984 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் குறித்து தெரிய வந்திருந்தும் சுமார் 9 வருடங்கள் கழித்து அதுவும் சாட்சிய விசாரணை தொடங்கி 10 முதல் 12 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் இந்த திருத்த மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்கக் கூடிய வகையில் (not in due diligence ) அமையவில்லை. மேற்கண்ட சூழ்நிலையில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள இந்த திருத்த மனுவினை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு செலவுத் தொகை இன்றி தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்திரவானது என்னால் நேரடியாக கைபேசியில் வாய்மொழியாக சொல்லப்பட்டு குரல் தட்டச்சு செயலி மூலமாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 17.07.2023 அன்று அவையறிய பகரப்படுகிறது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.07.17 20:21:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,அவிநாசி

பொறுப்பு (பல்லடம்)

பிற்சேர்க்கை;
இல்லை

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.07.17 20:21:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி

பொறுப்பு (பல்லடம்)